tamilguru.lk



## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

## சிறைச்சாலைகள் திணைக்களம்

## சிறைச்சாலைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு - 3 சேவை வகையின் தரம் III துணை வேலைப் பரீட்சகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச்செய்து கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

இலங்கைச் சிறைச்சாலைகள் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு - 3 சேவை வகையின் தரம் III துணை வேலைப் பரீட்சகர் பதவியின் ஐந்து (05) வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகுதியுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நவெம்பர் மாதத்தில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச்செய்து கொள்ளும் முறை:**

   i. பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் போட்டிப் பரீட்சையின் தேர்ச்சி தொடரொழுங்கிற்கு அமைவாக நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தகைமைகளைப் பரிசீலித்துப் பார்த்து வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச்செய்து கொள்ளப்படும். இந்த நேர்முகப் பரீட்சையானது ஒரு சாதாரண நேர்முகப் பரீட்சையாகும் என்பதோடு, அதில் தகைமைகளைப் பரிசீலித்தல் மாத்திரம் இடம்பெறும்.

   ii. எழுத்துப் பரீட்சையானது இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டதாகும். இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. பரீட்சைப் பாடங்களும் அப்பாடங்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் மற்றும் நேரமும் பின்வருமாறு:

| *தொ. இல.* | *பாடங்கள்* | *காலம்* | *அதிகபட்சப் புள்ளிகள்* | *சித்திக்கான புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 02 | தொழில்நுட்ப அறிவு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |

   **நுண்ணறிவுப் பரீட்சை:** இந்த வினாத்தாள் பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாகும். விண்ணப்பதாரியின் சிந்திக்கும் தர்க்கரீதியான திறனையும், அவரது சிந்திக்கும் பகுப்பாய்வு நிலையையும், தீர்மானிக்கும் ஆற்றலையும் தீர்மானிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும்.

   **தொழில்நுட்ப அறிவு:** கட்டிட நிர்மாணக் கோட்பாடுகள், நிர்மாணப் பணிகளுக்கான வரைபடங்களைத் தயாரிக்கும் ஆற்றலைப் புரிந்துகொள்ளல், நீர் வழங்கல், நீர் விநியோக நடவடிக்கைகள் மற்றும் கழிவகற்றல் செயல்முறைகள் தொடர்பான அறிவைப் பரிசோதிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட வினாத்தாளாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

2. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:**

   I. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய சம்பளத்திற்கு உரித்துடையதுமாகும். விதவைகள் மற்றும் அநாதைப் பிள்ளைகள் / தபுதாரர் மற்றும் அநாதைப் பிள்ளைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

   II. இப்பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் நிலைக் காலத்திற்கு உட்படுவதோடு, அந்த மூன்று (03) வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

   III. அரச நிருவாக சுற்றறிக்கை 18/2020 இன் பிரகாரம் அரச கரும மொழித்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

   IV. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள், சிறைச்சாலைகள் திணைக்கள நிலையியல் கட்டளைகள் மற்றும் ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

3. **சம்பள அளவுத்திட்டம்:**

இந்தப் பதவிக்கு அரச நிருவாக சுற்றறிக்கை 10/2025 ஆம் இலக்க சம்பளச் சுற்றறிக்கைக்கு அமைவாக MT 1 – 2025 சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் ரூபா 50,090 - 10 x 540 - 11 x 630 - 10 x 1,010 - 10 x 1,190 - ரூபா 84,420.00 (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்துடையதாகும். (2025.03.25 ஆம் திகதிய அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம்: 10/2025 இன் ஏற்பாடுகளுக்கமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் உரித் துடையதாகும்.)

4. **தகைமைகள்:**

4.1 **கல்வித் தகைமைகள்:**

சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.2 **உடற்தகைமை:**

I. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவ தற்கும்,

II. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பொருத்தமான உடலியல் மற்றும் உளவியல் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.3 **தொழிற்தகைமை:**

தொடர்புடைய துறையில் தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 05 அல்லது அதற்குச் சமனானதென மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

4.4 **ஏனைய தகைமைகள்:**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. சிறந்த ஆரோக்கியமுடையவராகவும் மற்றும் நன்னடத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

III. ஒழுங்கீனமான குற்றமொன்று தொடர்பாக யாதேனுமொரு நீதிமன்றத்தினால் குற்ற வாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பது மேற் படி பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முழுமை யான தகைமையீனமொன்றாகக் கருதப்படும்.

IV. பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்குத் தேவை யான அனைத்துத் தகைமைகளும் விண்ணப் பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப் பிடப்படும் முடிவுத் திகதியான 2026.09.04 ஆம் திகதிக்கு அனைத்து விதத்திலும் பூர்த்தி யடைந்திருத்தல் வேண்டும்.

5. **வயது எல்லை**:

குறைந்தபட்ச வயது 18 ஆகவும், ஆகக்கூடிய வயது 35 ஆகவும் இருத்தல் வேண்டும். அதற்கமைய, விண்ணப்பதாரரின் பிறந்த திகதி 2008.09.04 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாகவும் மற்றும் 1991.09.04 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னதாகவும் அமைந்திருந்தால் மாத்திரம் வயது தொடர்பான தகுதி பூர்த்தியாகும்.

6. **விண்ணப்பிக்கும் முறை:**

6.1 பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது நிகழ்நிலை அமைப்பினால் வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்:

1. ஏதேனுமொரு வங்கியின் கடன் அட்டை மூலம்
2. இணையம் மூலம் கொடுப்பனவு செய்ய முடியுமான வசதியைக் கொண்டுள்ள ஏதேனுமொரு வங்கி வரவு அட்டை மூலம்
3. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை / Flex செயலி மூலம்
4. ஏதேனுமோர் இலங்கை வங்கி கிளையின் மூலம்

குறிப்பு:

(அ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள முறைகளின் மூலம் கட்டணம் செலுத்துகின்ற முறை பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல் களின் கீழ் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றமை குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) செய்தி மூலமாகவோ அறியத்தரப் படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்படல் வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்டணத்தை விடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்படி கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படுகின்ற தவறுகளுக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப் பேற்கமாட்டாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் மீளளிக்கப் படமாட்டாது அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்படவும் மாட்டாது.

6.2 விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத் தளத்தின் “Our Services” என்பதன் கீழ் உள்ள “Online Applications – Recruitment Exams/E.B. Exams” என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) முறையில் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2026 ஓகத்து மாதம் 10 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்ப மாவதுடன் 2026 செத்தெம்பர் மாதம் 04 ஆம் திகதி பி.ப. 09.00 மணிக்கு முடிவடையும்.

6.3 தற்போது அரசு / மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தமது தனிப்பட்ட பெயர் வழிக்கோப்பில் உட்சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி மற்றும் சேவை உறுதிப் படுத்தல் கடிதம் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.4 விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதை கடைசித் திகதி வரை தாமதிப்பதால் ஏற்படுகின்ற எந்தவொரு பாதகமான விளைவுகளையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்றுக்கொள்ளல் வேண்டும்.

6.5 நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்யப் படுதல் வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ் நிலையாக அனுப்பப்பட்ட மென் பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக் களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது / ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது முறைமைக்குள் நுழைவதற்காகப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கோ அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தைப் (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது அந்த அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதில் செய்யப்படுகின்ற எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்த மொன்றாகக் கருதப்படமாட்டாது. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித் தலின்றி நிராகரிக்கப்படும்.

6.6 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற கணிப்பின் அடிப் படையில், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் விதிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்குரிய சரியாகப் பூர்த்தி செய்யப் பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண் ணப்பதாரர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் நிகழ்நிலையில் மாத்திரம் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றிய விபரம் இணையதள அறிவித்தல் மூலம் / விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ்செய்தி மூலம் அறியத்தரப்படும். தமது அனுமதி அட்டையைப் பெறாத விண்ணப்பதாரர் எவரேனுமிருப்பின் இணையதள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் தாபனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடம் உசாவுதல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரிக்கப்பட்ட கோரிக்கைக் கடிதத்தை இணையதள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி உசாவுவது மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் யாதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியைத் தயார் நிலையில் வைத்திருப்பது பயனுடையதாக இருக்கும். அனுமதி அட்டையைப் பரிசீலித்துப் பார்த்துத் திருத்தங்கள் இருப்பின் காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பத்திற்கு அமைய உரிய திருத்தங்களை மேற்கொள்வது அவசியமாகும். பரீட்சை மண்ட பத்தில்/நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங் களுக்காகச் செய்யப்படுகின்ற கோரிக்கைகள் பரிசீலித்துப் பார்க்கப்படமாட்டாது.

6.7 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண் ணப்பதாரரின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். யாதேனுமோர் அரச நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரியொருவர் தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூலமும், அவ்வாறில்லாத விண்ணப்பதாரியொருவர் தனது கையொப்பத்தை பிரிவின் கிராம அலுவலர், அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது தலைமைத் தேரர் அல்லது ஏனைய சமய வழிபாட்டுத் தலத்திற்குப் பொறுப்பான சமயத் தலைவர்கள் அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க அந்தஸ்தைக் கொண்டுள்ள ஒருவர் மூலம் அத்தாட்சிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

7. **பரீட்சைக்குச் சமுகமளித்தல்:**

(அ) விண்ணப்பதாரர் ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பரீட்சை

அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தி முதன் முதலில் அந்த மண்டபத்தில் தோற்றும் நாளில், அதனைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனுமதி அட்டையின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் இந்த வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் விதிக்கப்படும் விதிகளுக்குப் பரீட் சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அந்த விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு அவர் உள்ளாகுவதற்கு நேரிடும்.

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவருக்குப் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற்றுள்ளார் அல்லது பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படக் கூடாது.

8. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடைகின்ற வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் செல்லுபடியானதாகும்:

I. தேசிய ஆளடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

மேலும், பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் முகத்தை மூடாமலும் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தக் கூடிய வகையிலும் இரு காதுகளை மூடாமல் பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். இதற்கு இணங்காத எவரும் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

9. **தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை:**

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனமாகச் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் விதிகளுக்கமைய எவரேனுமொரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் என வெளிப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தித் தன்மை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானது எனத் தெரிந்துகொண்டே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என வெளிப்பட்டால், அல்லது ஏதேனுமொரு முக்கியமான விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின், அவரது நியமனத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **பெறுபேறுகளை வெளியிடுதல்:**

நியமன அதிகாரியினால் பெறுபேறுகளை வெளி யிடுவதற்குப் பொருத்தமான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் / மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறுபேற்றுப் பத்திரமொன்றைப் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

**முக்கிய குறிப்பு:** பரீட்சைக்குத் தோற்றுவது அல்லது நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றுவது நியமனத்தை வழங்குவதற்கான தகைமையைப் பூர்த்தி செய் துள்ளதாகக் கருதப்படமாட்டாது.

❖ குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரமுள்ளது.

❖ இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின், அது தொடர்பாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் தீர்மானம் எடுக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுப் பரீட்சை விதிகளுக்கமையச் செயற்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளனர்.

❖ இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது பொருத்தமின்மை காணப்படும் பட்சத்தில், சிங்கள மொழு மூல அறிவித்தலே சரியானது எனக் கருதிச் செயற்படுதல் வேண்டும்.

ஆர். பிரசாத் ஹேமந்த குமார
சிறைச்சாலைகள் ஆணையாளர்
நாயகம் (க/நிறை)

சிறைச்சாலைகள் தலைமையகம்,
இல. 150,
பேஸ்லைன் வீதி,
கொழும்பு 09,
2026, யூலை 30.

08-39